# BASIX

தகவல் தாள்

ஆகஸ்டு 2018

## BASIX என்றால் என்ன?

பேசிக்ஸ் (Basix), அல்லது கட்டட நிலைத்தன்மை குறியீட்டெண் என்பது புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட வீடுகளின் குறைந்தபட்ச நிலைத்தன்மைக்கான இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம் வீட்டு மின்சாரம் மற்றும் தண்ணீர் பயன்பாட்டினைக் குறைக்கும் நியூ சவுத் வேல்ஸ் அரசின் திட்டமிடல் நடவடிக்கை ஆகும். வெப்ப வசதி அத்துடன் தண்ணீர் மற்றும் எரிசக்தி இவைகளின் வீட்டுப் பயன்பாடு ஆகியவற்றின் நிலையைப் பாதிக்கக்கூடிய இருப்பிடம், கட்டட அளவு, திசையமைப்பு மற்றும் கட்டுமான வகை, நில வனப்பு மற்றும் பொருத்து சாதனங்கள் போன்ற வடிவமைப்பு அம்சங்களை பேசிக்ஸ் அடையாளம் காண்கிறது. இது பேசிக்ஸ் சான்றிதழைத் தருவதற்கு முன் நிறைவேற்ற வேண்டிய, அதன்பின் விரிவாக்க விண்ணப்பம் அல்லது இணக்கமான விரிவாக்கத்துக்கான விண்ணப்பத்தின் ஒரு பகுதியாகச் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச இலக்குகளை நிர்ணயிக்கிறது. தண்ணீர் மற்றும் எரிசக்தியின் பயன்பாடு அனைவரையும் பாதிக்கிறது. வீட்டுக்கான எரிசக்தி மற்றும் தண்ணீர் பயன்பாட்டையும், செலவையும் குறைக்கும் முயற்சியை பேசிக்ஸ் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது.

## எனக்கு BASIX சான்றிதழ் தேவைப்படுமா?

கீழ்க்காணும் கட்டுமானங்களுக்கு ஒரு பேசிக்ஸ் (Basix) சான்றிதழ் தேவைப்படும்:

- புதிய வீடுகள்
- புதிய டவுன்ஹவுஸ்கள் மற்றும் வில்லாக்கள்
- புதிய இரட்டைக் குடியிருப்புகள்
- புதிய முதியோர் குடியிருப்புகள் (granny flats)
- புதிய குடியிருப்புத் தளங்கள் (flats) மற்றும் அடுக்குமாடி வீடுகள் (apartments)
- 50,000 டாலர் அதற்கு அதிகமாக செலவில் தற்போதுள்ள வீட்டைப் புதிப்பித்தல்
- 40,000 லிட்டருக்கு அதிகமான கனஅளவுள்ள நீச்சல் குளங்கள் மற்றும்/அல்லது நீச்சல் தொட்டிகள் (spas)
- தற்போது யாரும் குடியிருக்காத கட்டடத்தைக் குடியிருக்கும் கட்டடமாக மாற்றுதல்.

கீழ்க்காணும் வேலைகளுக்கு பேசிக்ஸ் (Basix) சான்றிதழ் தேவைப்படாது:

- வர்த்தக அல்லது தொழிற்சாலைக் கட்டட வேலைகள்
- ஒப்புதல்கள் தேவைப்படாத, விலக்களிக்கப்பட்ட விரிவாக்கத்துக்குரிய விதிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சிறு குடியிருப்புக் கட்டட வேலைகள். விலக்களிக்கப்பட்ட விரிவாக்கம் தொடர்பான தகவல்களுக்கு NSW Planning Portal செல்லவும்.

நீங்கள் செய்ய எண்ணியுள்ள வேலைகள் எவ்வகையைச் சார்ந்தது என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றால், உங்கள் உள்ளூர் கவுன்சில் அல்லது அங்கீகாரம் பெற்ற தனியார் சான்றளிப்பாளர் மூலம் சரிபார்க்கவும்.

பேசிக்ஸ் செயல்திட்டத்தை நீங்களே தன்னார்வ அடிப்படையில் பூர்த்தி செய்து, அறிக்கையை உங்களுடைய சொந்த பார்வைக் குறிப்புக்காக உருவாக்க விரும்பலாம்.

## எனக்கு BASIX சான்றிதழ் எப்படிக் கிடைக்கும்?

நீங்களே பேசிக்ஸ் சான்றிதழை உருவாக்கிக் கொள்ளலாம் அல்லது உங்கள் கட்டடக் கலைஞர் அல்லது வடிவமைப்பாளரிடம் உங்களுக்காக இதைச் செய்யக் கேட்டுக் கொள்ளலாம். www.basix.nsw.gov.au என்ற இணையதளத்தில் உள்ள பேசிக்ஸ் மதிப்பீட்டுக் கருவியை இணையத்தில் பயன்படுத்தவும். உங்கள் உத்தேசக் கட்டடச் செயல்திட்டத்தின் விவரங்களை உள்ளீடு செய்யவும். மதிப்பீட்டுக் கருவி அதன்பின் விவரங்களை ஆராய்ந்து அவற்றை எரிசக்தி மற்றும் தண்ணீர் இலக்குகளுக்கேற்ப மதிப்பெண் அளிக்கும். இலக்குகளுக்கு ஏற்றபடி உங்கள் திட்ட வடிவமைப்பை சரிப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கலாம். திட்டம் ஒத்துப்போனால் சான்றிதழ் கட்டணம் செலுத்தியபின் பேசிக்ஸ் சான்றிதழ் உருவாக்கப்படும்.

NSW GOVERNMENT

ஆகஸ்டு 2018

பேசிக்ஸ் சான்றிதழில் நீங்கள் ஏற்றுக் கொண்ட ஒப்பந்தங்கள் பட்டியலிடப்பட்டிருக்கும். இவை உத்தேசத் தயாரிப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டு, கட்டுமானத்தின்போது சோதிக்கப்படவேண்டும். பேசிக்ஸ் சான்றிதழைச் சம்பந்தப்பட்ட ஒப்புதல் அதிகாரத்துக்கு (கவுன்சில் அல்லது அங்கீகாரம் பெற்ற தனியார் சான்றளிப்பாளர்) சமர்ப்பிக்க உங்களுக்கு மூன்று மாதங்கள் அவகாசம் உண்டு. சான்றிதழ் உருவாக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நீங்கள் சமர்ப்பிக்காவிட்டால், அதன்பின் அது செல்லுபடியாகாது. நீங்கள் உங்கள் செயல்திட்டத்தில் மாற்றங்கள் செய்யநேரிட்டால் உங்கள் சான்றிதழும் திருத்தப்படவேண்டும். கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

**பேசிக்ஸ் (BASIX) உடன் இணக்கமாகப் போவதற்கான யோசனைகள்**

- குளிர்காலத்தில் சூரிய வெப்பம் உள்ளே வருவதற்கும் (வெப்பச் சுமையைக் குறைக்கிறது) கோடை காலத்தில் சூரிய வெப்பம் உள்ளேயே இருப்பதற்கும் (குளிர்ச் சுமையைக் குறைக்கிறது) உதவும் வகையில் உங்கள் வீட்டின் திசையமைப்பு, சன்னல்களின் அளவு மற்றும் இருப்பிடம், மற்றும் பயன்படுத்தப்படும் கட்டடப் பொருட்கள் போன்றவற்றை எவ்வாறு வடிவமைப்பது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.
- மின்விசிறிகள், குளிரூட்டிகள் மற்றும் வெப்பமூட்டிகள் போன்ற தீவிரமாக வெப்பமூட்டும் மற்றும்/அல்லது குளிரூட்டும் சாதனங்கள் தேவையா என்பதை எண்ணிப் பார்க்கவும். தேவைப்பட்டால், எரிசக்தியைச் சிக்கனப்படுத்தும் சாதனங்களைத் தேர்வு செய்யவும்.
- கூரைகளையும், சுவர்களையும் வெப்பக் கடத்தாப் பொருட்களைக் கொண்டு மூடவும்..
- முன்கூரை மற்றும் சன்னல் நிழல் குடை போன்றவற்றைப் பயன்படுத்தவும்.
- மெல்லிய வண்ண கூரைப் பொருட்களைத் தேர்வு செய்யவும்.
- திறன்மிகுந்த நீரைச் சூடாக்கும் சாதனைத்தைத் தேர்வு செய்யவும்.
- குறைந்த நீர் தேவைப்படும் நிலவனப்பைத் தேர்வு செய்யவும்.
- நேரடியாக விநியோகிக்கப்படாத, வீட்டுக்குப் பயன்படும் தண்ணீர் (எ.கா. மழைநீர்) போன்ற மாற்று நீர் ஆதாரங்களைத் தேர்வு செய்யவும்.
- உங்கள் மழைநீர்த் தொட்டியைக் கழிப்பறைகளுக்கும், சலவை செய்வதற்கும் மேலும் தோட்டத்துப் பயன்பாட்டுக்கும் இணைப்புக் கொடுப்பதைப் பற்றிக் கருத்தில் கொள்ளவும்.
- தண்ணீரைச் சேமிக்கும் வகையிலான குளியலறை நீர்த்திவலைக் கூடுகள் (showerheads), குழாய்கள் மற்றும் இரு வகையில் தண்ணீரை வெளியேற்றும் வசதி கொண்ட (dual-flush) கழிப்பறைகளைப் பொருத்தவும்.
- உங்களிடம் நீச்சல் குளம் இருந்தால், குளத்தை மூடும் துணி, நிழல்குடை மற்றும் நிரப்புவதற்கு மழைநீர் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளவும். விசைக்குழாய் இயக்கியை (pump timer) நிறுவவும். நீச்சல் குளத்தைச் சூடாக்க விரும்பினால், சூரிய சக்தியைப் பயன்படுத்துவது மிகவும் திறன் வாய்ந்தது.

## இதைப் பற்றி மேலும் நான் எங்கே தெரிந்து கொள்ளமுடியும்?

- 1300 650 908 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கவும்.
- உங்களுக்கோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கோ மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவைப்பட்டால், 13 14 50 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கவும். உங்கள் மொழிக்கான மொழிபெயர்த்துரைப்பாளர் வேண்டுமென கேட்டு உங்களை 1300 650 908 Basix Helpdesk உடன் இணைப்பு தரவேண்டுமெனக் கூறவும்.
- அல்லது info@service.nsw.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சலை அனுப்பவும்.

NSW GOVERNMENT